தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி-3 | தி.பி. 2016 | விடை 2 (28-4-85) | 65 காசுகள் | இதழ் எண்: 56 | பகுதி 12-13

இலங்கைச் சிக்கலில், தமிழ்நாடு அரசின் கண்துடைப்பு முயற்சிகள்!

ம. கோ. இரா. சரியான நடவடிக்கை எடுக்க அஞ்சுகிறார்!

திராவிட இயக்க வீரர்கள் ஏன் அடிமையாகப் போனார்கள்?

பணத்திற்கும், பதவிக்கும் தங்கள் தன்மானத்தையும், துணிவையும் அடகு வைத்து விட்டார்களா?

கோழைத்தனமான முடிவுகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இவர்கள் யார்?

தமிழீழம் அமைத்துக் கொடுப்பதற்கே இவர்கள் முயற்சி செய்ய வேண்டும்!

தமிழ்நாட்டின் உரிமைகளை விற்று இவர்கள் குளிர்காயப் பார்க்கிறார்கள்!

கலைஞரின் தமிழீழம் ஒன்றே என்னும் கோரிக்கைக்கு நம் மனமார்ந்த பாராட்டுகள்!

தமிழீழச் சிக்கல் ஏதோ இப்பொழுது தான் தொடங்கியுள்ளதைப்போல், இலங்கையில் நாளுக்கு நாள் குண்டடி பட்டும், நெருப்பில் எரிக்கப்பட்டும் செத்துக் கொண்டிருக்கையில், அழுகின்ற பிள்ளைக்கு விரலில் நெய்தடவி விடுவதுபோல், தமிழக முதல்வர் மீண்டும் தம் அரசியல் கூட்டாளிகளைக் கூட்டிக் கொண்டு, தில்லிக்கு உலாப்போய், ஏதோ ஒன்றரை முழம் கோரிக்கையை, இராசீவ் காந்தியிடம் நீட்டியுள்ளார். இதைவிடக் கோழைத்தனம் வேறு இருக்க முடியாது.

இவர் அழைத்துச் சென்ற அரசியல் கூட்டாளிகள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் என்று வேறு சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஏதோ 'ஓர் ஆள் குழு' (One man Commission) என்பார்களே, அப்படிப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களையும், அரசியல் ஊதியத்திற்காகவும், பதவி நலத்திற்காகவும், பண வாடைக்காகவும் எதையுமே விட்டு விடவும், விற்றுக் கொள்ளவும் வேட்டிகளை வரிந்துக் கட்டிக்கொண்டு நிற்பவர்களெல்லாம் மக்கள் படிநிகராளிகள் என்று பெயர் பண்ணிப் பட்டியலிட்டுக் கொண்டு, அழைத்துப் போய், தில்லியில் உள்ள தலைமையமைச்சரின் அறையில் போட்டுள்ள மெத்திருக்கைகளில் உட்கார வைத்திருக்கிறார்.

ஏதோ. **'கரிசனம் கட்டிக்கொண்டு அழுகிறது; கட்டுச்சோறு புட்டுக்கொண்டு அழுகிறது'** என்பார்களே, அதுபோல், தமிழீழ மக்கள்மேல் அக்கறைப்பட்டு, 'வெங்காய' அழுகை அழுதுகொண்டு போன இவர்கள், அங்கு என்ன எழுதிக் கொடுத்தார்கள்? 'இலங்கையில் தமிழ் மக்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் சம வாழ்வு வாழ, அவர்கள் ஏற்கத்தக்க வகையில், அரசியல் தீர்வு காண, செயவர்த்தனேவுடன் பேச்சுப்பேசிக் கிழிக்க வேண்டும்' என்று தண்டனிட்டு வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இராசீவ் பட்டத்திற்கு வருவதற்குமுன் இந்தியப் பேரரசி இந்திரா(ணி) அம்மையாரிடம் ஏற்கனவே கொடுத்த வேண்டுகோளுக்கு (இவர்கள்' **பாசை**யில் **'மகஜர்'**) என்ன தீர்வு ஆனதோ? சிறப்புத் தூதுவர் பார்த்தசாரதி(யார்) தில்லிக்கும்-கொழும்புக்கும் பறந்து, பறந்து பேசினாரே! அஃது என்ன ஆனது? இரண்டு மாதங்களுக்கு முன், அயலக உறவுச்செயலர், இரமேசு பண்டாரி போய் இலங்கையை இரண்டு மூன்று நாள்கள் சுற்றிப் பார்த்து விட்டு, **'இலங்கை இட்லரிடம்'** பேசிவிட்டு வந்தாரே, அதுவும் வெறும் பேச்சுத்தானே? இவர் இருவருமாகிலும் அயல்நாட்டவர். வட்டமிசை மாநாடென்று, 'பயனில்லை' என்று பண்ணிப் பண்ணிச் சொல்லியும், தம் **'பத்தாவை'**யும், **'பவிசை'**யும்விடாமல், (பொறுத்துக் கொள்ளுங்கள்; தமிழில் இப்போலி உணர்வுகளைக் குறிக்கச் சொற்களில்லை.) பேச்சுப் பேச்சென்று திருப்பித் திருப்பிப் பேசினாரே அமிர்தலிங்கம், அஃதென்ன காற்றில் கரைந்து போய்விட்டதா?

இனி, இராசீவ் போய்ப் பேசவேண்டும் என்று இப்பொழுதைய தூதுக்குழு கேட்கிறது? 'இந்த நாடகம், இந்த மேடையில்', எத்தனை நாள் நடக்கும் தெரியவில்லையே! அதற்குள் இலங்கைத் தமிழினம் என்ன ஆகுமோ, புரியவில்லையே! ஆட்சியாளர்கள் சூழ்ச்சியாளர்களாகவும், அதிகாரக்காரர்கள் 'சதிகாரத்' தீரர்களாகவும் இருந்துவிட்டால் குடிமக்கள் அடிமாடுகளாகச் சாகவேண்டியதுதானே, அன்றிலிருந்து இன்றுவரையுள்ள வரலாறு! இவர்கள் ஆள்வதைவிட மாள்வது நன்று! கோழைகளும் மோழைகளும் வரலாற்றை மீட்க முடியாது!

பகையகத்துச் சாவார் எளியர்; அரியர்
அவையகத்து அஞ்சா தவர். (723)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

தொடர் 10

ஐந்து நாடுகளில் முப்பது நாள்கள்!

என் முதல் ஐரோப்பிய சுற்றுச் செலவு

4. பாரிசு நிகழ்ச்சிகள்: (தொடர்ச்சி)

ஒழுக்கம், பண்பாடு — இவை இரண்டு சொற்களும் வேறு எந்த நாட்டினரையும் விட, இவ் விந்திய நாட்டில் (குறிப்பாகத் தமிழ் நாட்டில்) மிகவும் ஆழமான பொருள்தரும் சொற்களாக வழங்குகின்றன. ஒழுக்கம் என்பதற்கு நல்ல நடத்தை (Good Conduct, Good behavier, Good moral, Virtue - நன்னெறி) என்றும், பண்பாடு (Acting to the established rules or customs) என்பதற்கு அறிவின் பண்பட்ட நிலை (Culture, good quality becoming or being made fit or serviceable; being obedient, submissive) என்றும் பொருள் கொள்ளப் பெறுகின்றன. ஆனால், இவையெல்லாம் ஒருவன் நேர்மையாளனாக, உண்மையாளனாக, குமுகாயத்திற்குப் பொருந்திய நடத்தையுள்ளவனாக, பண்பினனாக நடந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்திலேயே கூறப்பெறுகின்றன!

ஒருவன் நேர்மை, உண்மை, நெறிப்பட்ட வாழ்வியல் நடத்தை உள்ளவனாக வாழ்கிறான் என்று வைத்துக்கொண்டாலும், அவன் ஒழுக்கம் உடையவன் என்று உலகம் ஒப்புக்கொள்வதில்லை. இந்நாட்டைப் பொறுத்தவரை 'ஒருவன் ஒரு பெண்ணிடம் அல்லது பெண்களிடம் எவ்வாறு நடந்து கொள்கிறான்' என்பதைப் பொறுத்துத்தான் அவன் ஒழுக்கம் பண்பு தீர்மானிக்கப் பெறுகிறது. எனவே, ஆண்-பெண் உறவு நிகழ்ச்சியைப் பொறுத்தே ஒழுக்கம் என்பதும் பண்பு என்பதும் வரையறுக்கப் பெறுகின்றன. இவையனைத்துக்கும் பாலியல் உணர்வே அடிப்படையாக இருப்பதைப் பார்க்கிறோம். இவற்றுக்கு இந்த நாட்டைப் பொறுத்தவரை வேறொரு கோட்பாடும் உண்டு. பெண்கள் ஒழுக்கந்தான் இதில் மிகவும் வலியுறுத்தப் பெறுகிறது. பெண்கள் ஒழுக்கம் என்பது தம் தம் குடும்பப் பாங்குடன், அஃதாவது, தம் பெற்றோர் உற்றார் -உறவினர், கணவன், மக்கள் ஆகியோரின் கருத்துகளுக்கு ஒத்தவளாக அல்லது உடன்பட்டவளாக நடந்துகொள்ளவேண்டும் என்பதையே குமுகாயம் எதிர்பார்க்கிறது. அஃதாவது அவள் எப்பொழுதும், தன் குடும்பக் கட்டுப்பாட்டை மீறிப் போகிறவளாக ஆகிவிடக்கூடாது என்பதே அதன் நோக்கம். இங்குதான் அவள் பெரிதும் அடிமைப் படுத்தப்படுகிறாள். இந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து அவள் தன்னை எப்பொழுதும் விடுவித்துக்கொள்ள முடியாதபடி, அவள் பேச்சுகள், நடத்தைகள், குமுகாயப் புற ஈடுபாடுகள், தன் விருப்பு வெறுப்புகள், அறிவு நிலைகள், வாழ்வியல் கூறுகள் அனைத்தும் கட்டுப்படுத்தப் பெறுகின்றன. அவள் தனக்குத் தொடர்பு அல்லாத வேறு யாரொடும் எந்த வகையிலும் தொடர்பு கொள்ளக்கூடாது. தன் பெற்றோர்கள், கணவன், பிள்ளைகள் இவர்களைத்தவிர, வேறு எவருடனும் அவள் தொடர்பு கொள்ளக்கூடாது என்பதே அவள் ஒழுக்கமாக வரையறைப் படுத்தப்பட்டுள்ளது, அவள் தன் விருப்பம்போல், மேலே கூறப் பெற்றவர்களைத் தவிர, அயலார் எவருடனும் பேசக்கூடாது, ஓரிடத்திற்குச் செல்லக் கூடாது, ஒன்றாகக் கலந்து அறிவுப் பரிமாற்றமோ, பணிப் பரிமாற்றமோ செய்து கொள்ளக்கூடாது என்பதே இங்கு அவளின் ஒழுக்கமாக வரையறுக்கப் பட்டுள்ளது.

'கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்' என்பதும், 'புகையிலை விரித்தால் போச்சு, பெண் பிள்ளை சிரித்தால் போச்சு' -என்னும் பழமொழிகள் பெண்ணடிமைக் கொள்கையின் வெளிப்பாடுகளே. இவை, சாதி, மதக் கோட்பாடுகளாகவும் விளங்குகின்றன. அஃதாவது, சாதிகள் ஒன்றுடன் ஒன்று கலந்துவிடக் கூடாது, மதக் கொள்கைகள் சீர்குலைந்து விடக்கூடாது என்னும் வருணசிரமக் கோட்பாடுகளை வலியுறுத்துகின்ற நோக்கத்துடனேயே பெண்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் வகுக்கப் பெற்றுள்ளன என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதற்கு [illegible] என்னும் சொல்லுக்குச் 'சாதி' (Caste), 'குலம்' (Tribe) என்னும் பொருள்கள் இருப்பதையும் சான்றாகக் கொள்ளலாம்.

பெண்கள் தங்கள் பாலியல் தொடர்புகளை வேறு சாதி, அல்லது இன ஆண்களிடம் வைத்துக் கொள்வதைத் தடுப்பதற்காகவே, ஒழுக்கம், பண்பாடு என்னும் பெயர்களில் அவளுக்கு அடிமை நிலைகள் வரையறுக்கப் பட்டுள்ளன. பெண் தான் விரும்பிய ஆணுடன் உடல் உறவு வைத்துக் கொள்ளக்கூடாது; பிறர் தேர்ந்தெடுத்துக் கொடுக்கும் ஒருவனையே கணவனாகவும், அவள் உடல் உறவு கொள்ளத்தக்கவனாகவும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஒழுக்கம் பண்பு என்று இங்கு கூறப்பெறுகிறது. அதேபோல் ஆணுக்கும் இங்கு ஓரளவில் இக் கட்டுப்பாடு வலியுறுத்தப் பெறுகிறது என்றாலும், அது கட்டாயப் படுத்தப்பெறாத ஒரு கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பெற்ற, ஒரு கோட்பாடாகவே, செயலில் வலிவு பெறுமல் உள்ளது.

ஆணின் புறவொழுக்கம் சிதைகிற பொழுதுதான், பெண்ணின் ஒழுக்கமும் சிதைகிறது என்பதை இந்நாட்டுச் சட்டமும் ஏற்றுக் கொள்வதில்லை. ஒழுக்கக் கேட்டைப் பொறுத்தவரை, இந்நாட்டில் பெண்ணே அனைத்துக்கும் தெரிந்தோ தெரியாமலோ காரணம் ஆகிப் போகிறாள். இருவரும் சேர்ந்து செய்யும் ஒரு குமுகாய நெகிழ்ச்சிக்கு அல்லது பாலியல் உறவுக்குப் பெண்ணே குற்றவாளி யாகிறாள். இஃது அவளின் மெலிவுத் தன்மையை நோக்கிய குற்றச்சாட்டே என்பதை இங்குள்ள குமுகாயம் இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை. அவள் மெலிவுந் தன்மைக்கும் அவள் ஆண்டாண்டுக் காலமாக அடிமைப் படுத்தப் பட்டுக் கிடப்பதுதான் முழுக் காரணம் என்பதையும் இன்னும் இங்கு உள்ளவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவள் படைப்பிலேயே மெலிவு சான்றவள் அல்லள் என்பதைப் படித்த அறிவாளிகளும் கூட இன்னும் முழு மனத்துடன் ஒப்புக் கொள்வதில்லை! மங்கயமாவையும், சான்சி இராணியையும், சோன் ஆப் ஆர்க்கையும் ஒப்புக் கொள்கிறவர்கள், கண்ணகி, கத்தூரிபா, சாரதா மணி போன்றவர்களும் இருக்கவேண்டும் என்றுதான் மிகுதியாக வற்புறுத்துகின்றனர். கண்ணகியை ஒரு பெண்ணாக மதிப்பவர்கள், மாதவியையும் ஒரு பெண்ணாக மதிப்பதில்லை. ஒழுக்க நிலையில் மாதவியை விட, கண்ணகியே உயர்ந்தவள். தெய்வமாகப் போற்றத் தகுந்தவள் என்பதே இவர்கள் கொள்கை. அதற்காகவே கண்ணகிபிடம் நல்ல குடும்பப் பாங்கை மட்டுமல்லாது, தெய்வத் தன்மையையும் புகட்டியுள்ளார்கள். பெண் என்றால் அவளவள் தன்மையில், அவளவள் உயர்ந்தவள்தான் என்பதை இவர்கள் ஒப்புக் கொள்வதில்லை.

வழி வழியாக, மரபு நிலையில், ஆண்-பெண் நடைமுறைகள் பற்றி, வகுக்கப்பெற்ற அனைத்து ஒழுக்கக் கூறுகளும், நன்மைகளும், தீமைகளும், அறங்களும், அறமல்லாத செயல்களும் பெரும்பாலும் பாலியலை நோக்கியவனவாகவே இருப்பதை நாம் அனைவரும் மறந்துவிடக் கூடாது. மாந்தனின் மதிப்பீட்டுத் தன்மையே பாலியலை நோக்கியே அமைந்துள்ளன. ஆண்-பெண்ணின் தோற்றம், உடல் நலம், அழகு, மனவுணர்வு, அறிவியக்கம் இவை அனைத்துக்குமே பாலியல் அடிப்படையான காரணமாகிறது என்பதை, அறிஞர்கள் ஒப்புகிறார்கள். இன்னும் சொன்னால், உலகியல் தொடர்பான அனைத்து வினைகளுக்கும் செயல் மதிப்பீடுகளுக்கும், ஏன், உலகியல் தொடர்பற்ற மெய்யறிவுணர்வுக்கும் கூட, பாலியல் உணர்வே காரணமாகிறது என்பதை நாம் மனந்திறந்து ஒப்புக்கொள்ள வேண்டும்.

நம் நாட்டு முற்கால, இக்கால முனிவர்கள், துறவிகள், மதத் தலைவர்கள் முதலியவர்களையும், அரசர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் வரலாற்று நாயகர்கள் முதலிய அனைவரும் பாலியல் உணர்வுத் தொடர்புள்ளவர்களே என்பது அவர்களின் வரலாறுகளை நுணுகிப் பார்ப்பவர்களுக்குப் புலனாகாமல் போகாது. நமக்கு வழி வழியாகக் கற்பிக்கப் பெற்று வரும் கதைகள், வீர வரலாறுகள் அனைத்தும், காதலையும் வீரத்தையுமே அடிப்படையாகக் கொண்டவை. காதலாலேயே வீரம் விளைவதும், வீரத்தின் முடிவில் காதல் மலர்வதும், இரண்டும் வாழ்க்கைக்கு இரண்டு வாயில்களாக விளங்குவதும் எல்லாரும் அறிந்தனவே! ஆனால், அவற்றுக்கும் அடிப்படையாக, மூல உணர்வாக உள்ள பாலுணர்வை நாம் மதிப்பிடத் தவறலாகாது. பாலியல் உணர்வு திரும்பியவர்கள் வரலாறுகளில் இடம் பிடிப்பதில்லை. அப்படியானவர்கள் - அலிவுணர்வுள்ள மாலிகாபூர் போன்ற ஓரிருவர்-வரலாற்றில் நாம் காணத் தகுந்தவர்களானாலும், அவர்கள் நாம் மதிக்கத் தகுந்தவர்களாக விளங்கியதில்லை!

எங்கோ ஒரு புத்தர், வர்த்தமானர் போன்றவர்கள் முழுத் துறவிகளாகக் காண்பது, மாந்தக் குமுகாயத்தின் நெறி விலக்கானது. அவ்வாறு மணிமேகலை, அல்லியரசி போன்ற ஓரிரு பெண்டிர்களையும் காணமுடியும். ஆனால், அல்லி, அர்சுனனாகிய பாண்டிய குல மன்னனைக் காணும் வரையிலேயே அவளால் கன்னி ஒழுக்கம் கடைபிடிக்கப் பட்டு வந்தது. மற்றபடி, காதலுக்கும், காமத்திற்கும் ஆட்படாத மாந்தப் பிறவிகளைப் பார்ப்பது இன்றுவரையில் மட்டுமன்று மக்களினம் இருக்கும் வரையிலும் என்றுமே இருத்தல் இயலாது; அஃது இயற்கைக்கு மாறுபட்ட நிலையாகவே இருக்க முடியும்.

இத்தகைய ஓர் அரிய உணர்வை இழிவு என்று இவ் விந்திய நாட்டுப் பண்பாடு கருதுவதும், இதுவே உயிரின வாழ்க்கை என்று மேனாட்டு ஐரோப்பிய நாகரிகம் கருதுவதும், இரு வேறு பிழைபட்ட வாழ்வியல் குற்றங்களாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். உயிரினங்கள் அனைத்துக்கும், அவற்றின் உயிர் மலர்ச்சிக்குமே அடிப்படையான சிதைவற்ற பாலியல் உணர்வுகள், மக்களுக்குக் கற்பிக்கப் பெறுவதுபற்றி, இந் நாட்டில் சிந்தனையளவிலும் ஏற்றுக் கொள்ளப்பெறுமல் இருப்பது பெரிதும் வருந்தத் தக்கதே ஆகும்.

பாலியல் உணர்வை, அனைத்தையும் இட்டு வைக்கும் ஒரு மாழை ஏனமாகக் கொண்டால், அதைப் புழக்கப் படுத்தாமல் களிம்பேறிக் கிடக்க வைத்திருக்கிறோம் நம்நாட்டில். மேனாடுகளிலோ, அது பலவாறு தாறுமாறுகப் பயன்படுத்தப்பட்டு ஒடுங்கியும், நசுங்கியும் கிடக்கிறது என்பதாகக் கருதிக்கொள்க. இந்த வேறுபாடுகளை நாம் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நம் நாட்டில் வெளிப்படையாக, அது கல்வி. ஒரு வாழ்வியல் கூறு, அஃது உடலியலைப் பற்றிய அறிவியல் என்ற அளவில் அது கற்பிக்கப் பெறுமல் இருப்பதால், அதைத் திருட்டுத் தனமாக, பிறர் அறியாத வகையில், பொங்கிக் குமுறிக் கொண்டு அவ்வப் போது அது வெளிப்பட்டு மனஞ் சுளிக்கின்ற வகையில் நாறிக் கிடக்கின்றது.

மாந்தர் வாழ்க்கைக்கு ஐம்புல அறிவு எவ்வளவில் முகாமையானதோ, அவ்வளவில்- இன்னுஞ் சொல்வதானால், அதை விட முகாமையானது, ஐம்புல இன்பம்.

> கண்டு கேட்டு உண்டு உயிர்த்து
> உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள. (1101)
>
> தாம்வீழ்வார் மென்றோள்
> துயிலின் இனிதுகொல்
> தாமரைக் கண்ணான் உலகு. (1103)

—என்னும் குறள் மொழிகள் அவ்வின்பத்தின் பெருமையைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

வாழ்வியலுக்கு மிகு தேவையாக உள்ள இப் பாலியல் உணர்வின் அடிப்படை அறிவின்மையே, நம் வாழ்க்கையின் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமாகி நிற்கிறது. பெண்ணின்பத்தின் தவறாக வரையறுக்கப்பட்ட அறிவின்மையால்தான், நம்நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு குடும்பங்களில், பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. அவை குடும்பப் பெருமையும், கட்டுக்கோப்பும் சீர்குலைவதற்கும் அடிப்படைகளாகின்றன. ஒரு மனைவிக்கும் கணவனுக்கும் பொருந்தாத பல கூறுகளில், இவ்வகைப் பொருத்தமின்மையே தலையோங்கி நிற்கிறது. இவ்வொரே ஒரு கூறு மிகச் சரியாக அமைந்துவிடில், அவர்களிடத்தில் உள்ள பிற பொருந்தாத பல கூறுகள் அனைத்தும் சரியாகிவிடும் என்பதை அனைவரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

பாலியல் உணர்வு அத்துணை வலியது; உணர்வு சான்றது; அறிவு, அன்பு ஆகிய அனைத்து வலிந்த, நுண்ணிய உணர்வுகளுக்கும் அடிப்படையானது; உயிர்த் தோற்றத்திற்கே மூலமானது. பிற இன்பங்கள் அனைத்துக்கும் முத்தாய்ப்பானது. அஃது அறிஞர்க்கும், கலைஞர்க்கும், ஆன்றோர்க்கும், ஆளப்படுவோர்க்கும், ஏழைக்கும், செல்வர்க்கும், கல்லார்க்கும், கற்றவர்க்கும், பேருயிர்க்கும் சிற்றுயிர்க்கும் மூல காரணமானது. கல்லாதவரிடத்தை விட, கற்றவர்களிடத்தில் இது மிக விளங்கித் தோன்றுவது. பாலியல் இன்பத்தைத் துறந்த எவரும் இவ்வுலகில் மரக்கட்டையாகவோ, உயிரற்ற சடலமாகவோ தான்வாழவேண்டும். எனவே, இவ்வுணர்வைப் பாவமானது என்றோ, இழிவானது என்றோ, தேவையற்றது என்றோ, மதிக்கத் தகாதது என்றோ, பார்க்கக் கேட்கத் தகாதது என்றோ எவரும் உரைக்கலாகாது. அவ்வாறு எவரேனும் உரைக்கவோ, மனம் சுளிக்கவோ செய்யின், அவர் படைப்புக் குறையுடையவராகவோ, மறைமுகக் களவு ஒழுக்கம் உடையவராகவோ தாம் இருத்தல் வேண்டும்.

அவ்வாறானால், தனி மாந்த ஒழுக்கம் என்பதும், குமுகப் பண்பாடு என்பதும், பாலியல் உணர்வுகளுக்கு அப்பாற்பட்டனவோ எனின், அவ்வாறன்று. ஒழுக்கம் என்பதே நெறிப்படுத்தப் பெற்றது; முறையானது: பிறர் வளர்ச்சிக்கும்வாழ்க்கைக்கும் தடையில்லாத வாறும், தன் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் உகந்தவாறும், ஊக்கமளிக்குமாறும் அமைந்தியங்குவது. ஒருவனின் தனி வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும் குமுகாய ஒழுக்கமும் பண்பாடும் தடையாக அமையுமெனில், அஃது ஒழுக்கமும் ஆகாது; பண்பாடும் ஆகாது. ஆனால் நம் நாட்டு ஒழுக்கம் என்பதும், பண்பாடு என்பதும், பொதுத் தன்மைக்கு நல்லனபோல் தோன்றினும், தனி மாந்த வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் தடையாக இருப்பனவே. அது தொடர்பாகச் சிலவற்றை இன்னும் விரிவாகப் பார்ப்போம்!

(தொடரும்.)

உ. த. மு. க. மாநிலச் செயற்குழுக் கூட்டம், மே 12-இல் ஈரோட்டில் காலை 9 மணியளவில் நடைபெறுகிறது!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3 இதழ் எண் : 56 (28-4-85) பகுதி 14-15

இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத குறையை மறைக்க, இராசீவ் நமீபியா விடுதலையை மேலே தூக்கிப் பிடித்துள்ளார்!

'தாய்க்குப் பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளது' என்பது ஒரு பழமொழி. இராசீவ் காந்தி, தாம் இந்திரா காந்தியின் மகன் தான் என்பதை, அவர் ஆட்சியேறிய ஒவ்வொரு நொடியும் மெய்ப்பித்துக் கொண்டுள்ளார். 'தாய் எட்டடி பாய்ந்தால்; குட்டி பதினாறடி பாயும்' என்பார்கள்!. அந்தத் தாயின் இந்தக்குட்டி, இருபத்து நாலடி, அஃதாவது தாயைப்போல மூன்று மடங்கு பாயும் என்பதை,மிக அண்மைக் காலங்களிலேயே காட்டிவிட்டது.

தன்மூப்புத் தன்மை, முதிய தலைவர்களை மதிக்காமை, அதற்கு மாறாக அவர்களைப் புறக்கணித்தல், விளம்பரத் தந்திரம், ஊதாரித்தனம், தன் பிள்ளை பட்டினி கிடக்க, ஊர் பிள்ளையை ஊட்டி வளர்க்கும் நயவஞ்சகக் கொடுமை, படைத்துறையைக் கொண்டு தீர்வு காண்பது முதலிய மக்கள் நல அரசியலுக்கு மாறான நடைமுறைகளில் உலகில் இந்திராவுக்கு நிகர் இந்திரா தான். அந்த முறைகளை அப்படியே மகன் கடைப்பிடிக்கவில்லையானாலும்,அவற்றினின்றுஇன்னும் வளர்ச்சியுற்ற-வடிவம் மாற்றப்பட்ட-தன்மைகளிலேயே அவர் அரசியல், பொருளியல், மக்கவியல் தீர்வுகளுக்கு விடை காண முற்பட்டுள்ளது மிகத் தெளிவாகத் தெரியவந்துள்ளது.

இந்திரா காலத்திலிருந்த அசாம், பஞ்சாப், ஒரிசா, மிசோரம், நாகாலாந்து கலவரங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. பற்றும் பற்றாததற்கு, குசராத்தில் தோன்றியுள்ள இட ஒதுக்கீட்டு எதிர்ப்புப்போராட்டம் வேறு புகை கிளப்பிக் கொண்டுள்ளது. இவற்றை ஏதோ புது முறையில் அணுகப் போவதாகத் தொடக்கத்தில் கூறியஇராசீவ், அதே படைத் துறையையும் குண்டு, குழாய்களையும் கொண்டுதான் அடக்கி வருகிறார், இந்த வகையில். தாய் பேசிய கொடுமையான சொற்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. செயலில் எந்த வகை மாற்றமும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆப்பிரிக்காவின் தென்மேற்கில் உள்ள நாடு நமீபியா. ஏறத்தாழ எழுபது ஆண்டுகள், அது, தென்ஆப்பிரிக்காவின் வெள்ளையர் அரசின் ஆளுமையில் சிக்கிச் சீரழிந்து கொண்டுள்ளது. நமீபியாவில் உள்ள மக்கள் தொகையில் ஒன்பது பங்கினர் கறுப்பர்கள் எனப்படும் நீக்ரோக்கள். ஒரு பங்கே வெள்ளைக் குடிமக்கள். மிக மிகச் சிறுபான்மை மக்களிடம், அங்குள்ள மிக மிகப் பெரும்பான்மை இன மக்கள் பல வேறு கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இந்த நிலைகளை எவரும் மறுக்கவோ மறைக்கவோ இல்லை.

ஆனால், இங்கிருந்து ஏறத்தாழ, 6,000 கற்கள் தொலைவிலுள்ள பெரும்பான்மை மக்களின் விடுதலைக்காக, இந்தியா அண்மையில் கூட்டுச்சேரா மாநாட்டின் தீர்மான நடவடிக்கைகள் மூலமாக எடுத்துள்ள முயற்சிகள், அந்நாட்டின் கொடுமையான தென்னாப்பிரிக்க வெள்ளை ஆட்சியை நடுங்க வைத்துள்ளன. இந்த நிலையில் தமிழீழப் போராட்டத்தைப் பற்றி ஏன் அது முழுக் கவனமோ அக்கறையோ கொள்ளவில்லை?

பதினெட்டுக் கற்கள் தொலைவில், தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும் தமிழீழத்தைப் பற்றிக் கவலைப்படாத இராசீவ் காந்தி, மிக நீண்ட தொலைவில் உள்ள நமீபியா சிக்கலில் இவ்வளவு அக்கறை காட்டுவது, பக்கத்து வீடு தீப்பற்றி எரிகையில், பக்கத்து ஊர் மக்களுக்காகக் கவலைப்படுவதே ஆகும். ஒருவேளை இலங்கைத் தமிழர்களுக்கு உதவாத குறையை, மறைப்பதற்காகவே, இராசீவ் நமீபியா விடுதலையை மேலே தூக்கிப் பிடித்துள்ளாரோ? தமிழர்கள் என்றால் தில்லியரசுக்கு அவ்வளவு இளக்காரமா? எண்ணிப் பார்த்துத் தமிழர்கள் தக்க முயற்சியில் ஈடுபட வேண்டாமா? எப்பொழுது, யார் என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி!

நம் இயக்கத்தின் உண்மை நிலைகள்-5

- கழக முதல்வர் -

22: 24: அடுத்து, இன்னும் ஓரிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும், நாம் எப்பொழுதும் பட்டங்களுக்கும் ஆசைப்பட்டதில்லை என்பதற்குச் சான்றுகளாகக் கூறி, நாம் கழகத் தொடர்பாகக் கூற வந்ததைப் பற்றிக் குறிப்பிடுவோம்.

நம் அன்பர்கள் தம் அறிக்கைகளிலும், சுவரொட்டிகளிலும், நம் இயக்க இதழ்களிலும் கூட, நம் பெயருக்கு முன்னால் இடுகிற பாவலரேறு என்னும் பாவறிவு புலப்படுத்தப் பெயர் விளக்கச்சொல், முதன் முதல் கவிஞர் என்னும் பாவெழுதும் தகுதி நிலைச் சொல்லாக, எம் பள்ளி வாழ்க்கையிலேயே (1945-46) ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் அன்புடன் அழைக்கப்பெற்று வந்தது. பின் அது கல்லூரிவாழ்க்கையிலும்(48-49)தொடர்ந்தது. 1951-இல், நம் நண்பர் தமிழ்வாணன் அவர்கள், சேலம் கவிஞர் என்னும் தலைப்பில் நம் படத்துடன், நம் தமிழறிவையும், தனித்தமிழ் ஆர்வத்தையும், பாராட்டியும் புகழ்ந்தும் அக்கால் வந்த கல்கண்டு இதழில் ஒரு பக்க அளவில் எழுதியிருந்தார்.

அதன் பின்னர் இதழ்களில் வெளிவந்த பாடல்களிலும், நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதிக் கொண்டிருந்ததால் (1951-52) அவற்றின் அறிக்கைகளிலும் 'கவிஞர்' என்னும் சொல்லே பெயரின் முன் இடப்பெற்று வந்தது. பின்னர் 1955-இல் புதுவையினின்று பாவேந்தர் பாரதிதாசனால் வெளியிடப்பெற்ற நம் முதற்பாவியமான கொய்யாக்கனி என்னும் நூலுக்கு அணிந்துரை வழங்கிய மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் 'பிற்காலத்துப் பெரும் பாவேந்தர் ஆதற்கேற்ற இவ்விளம் 'பாவலரை' என்று குறிப்பிட்டிருந்தார். அதன்பின், கவிஞர் என்ற சொல்போய் 'பாவலர்' என்றே அன்பர்கள் வழங்கி வந்தார்கள்.

தென்மொழி தொடங்கப் பெற்றபின் (1959) அதன் நூற்றுக்கணக்கான ஆர்வ மாணவர்களுள் சிறந்து விளங்கிய அப்பொழுதைய திருச்சி, தூய வளனார் கல்லூரி மாணவரும், இப்பொழுதைய,மதுரை யாதவர் கல்லூரி முதல்வரும் ஆகிய சாத்தையா என்றழைக்கப்பெற்ற திரு தமிழ்க்குடிமகன் அவர்கள் திருமணம் 1960-இல் பறம்புக்குடியில் நம் தலைமையில் நடந்தது. அவருடைய திருமண அழைப்பில் நம் பெயருக்கு முன்னால் புலவரேறு என்னுஞ் சொல்லை முதன்முதல் பெய்திருந்தார். அச்சொல் பாவலரேறு என்று பின்னர் அன்பர்களால் வழங்கப் பெற்றது. ஆக இச் சொல் 25 ஆண்டுக்கால வழக்குப் பழைமை உடையாது. இதனை நாமே விரும்பிப் போட்டுக் கொண்டதன்று. பல்லாயிரக் கணக்கான உயர்தனிச் செம்மொழிப் பாடல்களும் மொழி, இலக்கியம், இனம், வரலாறு, நாடு,மெய்யறிவு, கலை, பண்பாடு முதலிய அனைத்துத் துறைகளிலும் ஆயிரக் கணக்கான கட்டுரைகளும், வேறெவரும் எழுதற்கரிய பத்துப் பதினைந்து தூய செழுந்தமிழிலான புத்திலக்கியங்களும், பிற நூல்களும் எழுதி வெளிவந்த பின்னரும், உலகில் வேறெந்த இனத்திற்குமே இல்லாமல், இத்தமிழினத்திற்கே உரிய தனிச் சொத்துகளான மன இறுக்கமும், பொருமைப் புழுக்கமும் உண்மையறிவை மகிழ்ந்து பாராட்டாத போலி மனக் கோட்டமும், தன்னின அழிப்பும், உளச் செருக்கும், அறிவுத் திருகலும், வினை வேக்காளமும், உடலரிப்பும் கொண்ட நம் வெல்ல(!)த் தமிழினத்தின் நல்லவர்(!) சிலர், பாவலரேறு என்னும் இவ்வேதுங்கெட்ட தொழில் பெயர் அடையைக்கூட நாமே போட்டுக் கொண்டு பெருமையுறுவதாகக் கருதி, இதைத் தாமும் பயன்படுத்தினால் ஒருவேளை, தம் அறிவுக் குறைபாட்டையும், தம் தன்மானக் குறைவையும், தம் ஒன்றுமில்லா நேர்மையையும், ஏதோ தமக்கே இருப்பதாகக் கருதிக் கொள்ளும் பொதுவுணர்வுப் போலிப் பகுத்தறிவையும் பிறர் எங்கே தவறாக மதிப்பிட்டு விடுவார்களோ என்றும், அதனால், நாமெங்கே நெஞ்சாங்குலை கொழுத்து, மண்டை நரம்பு வீங்கிச் செருக்குநாளம் வெடித்துச், செத்து விடுவோமோ என்றும், தமக்கே இருப்பதாகக் கருதிக் கொள்ளும் அன்புணர்வாலும்(!), அடக்கவுணர்வாலும்(!) எண்ணிப் பலகாலும் பலரிடத்தும், சிற்சில கால், எம் செவி தோயுமாறு பக்கவாட்டிலும் கூறி வருவதையும், ஓரிரு பீற்றற்றாள்களில் ஊத்தை நடையில் உளறி வருவதையும் நாம் நன்கு அறிந்திருக்கின்றோம்.

அவர்களைப் போன்றவர்க்கே, நாம் பட்டங்களை ஏற்க விரும்பியதில்லை என்றும் விளக்க வேண்டி உள்ளது. மேடையில் வைத்துக்கொண்டே, அவ்வப்பொழுது, நம்மை அளவிறந்தும் பலபடவும் விதந்து, தம்தம் நலன்கள் நோக்கிப் பாராட்டியவர்களையும் புகழ்ந்தவர்களையும் கூட நாம் அவ்வவ் விடத்திலேயே நேருக்கு நேராகக் கண்டித்ததும், கண்டிப்பதும் இன்றும் கண்கூடு! அப்படிப் பேசிப் பின்னர் அறவருத்தம் கொண்டவர்களுள் நம் பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய அன்பர்களுள் ஈப்போ பேராளர் பாவலர் திரு. சா.சி. சுப்பையாவும், ஈரோட்டுப் பெருந்தகை திரு. வேலா. அரச மாணிக்கமும் கூட அடங்குவர். இதன் மேலும் நம் பெருமிதத்தைப் பெருஞ் செருக்கு என்று உணர்வுப் பாகுபாடறிந்திராமல், சொல்லுளியால் செதுக்கும் கல்லுளி மங்கன்களுக்காகவே கீழ்வரும் சில செய்திகளைச் சொல்லுகிறோம். இதற்குமுன் நாம் இவற்றை, இரண்டோர் உண்மை அன்பர்கள் தவிர, வேறு எவர்க்கும் எவ்விடத்தும் வெளிப்படுத்தியதில்லை என்பதையும் உணர்ந்து கொள்க.

22: 25: 1976 சனவரி, வாக்கில், இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்சின் (Cambridge)உலகப் பாவலர் கழகம் (Ienternational Academy of poets) கழகம் தோழமை உறுப்பாண்மைப்(Fellowship) பெருமையை அளிக்க முன்வந்தும், நம்மையும் நம் எழுத்தாக்கங்களையும் நன்கு உணர்ந்து கொள்ளாதநிலையில், ஏதோ ஒரு தகுதி நோக்கித் தரவிருந்த அப் பட்டத்தை ஏற்றுக்கொள்ளாமற் போனதையும்;1981-ஆம் ஆண்டு திசம்பர் தொடக்கத்தில் இத்தாலியிலுள்ள கலையியற் பல்கலைக் கழகம்(Universita 'Dell a Arte'-University of Arts) என்னும் நிறுவனம். நமக்குத் தகுதிப் பட்டயம் (Diplamo of Merit) வழங்க முன்வந்து, அதையும் நாம் அதே காரணத்தால் மறுத்ததையும் எவரும் அறிந்திலர். இச் செய்திகளை நாம் இங்கு எடுத்துக் கூறுவதன் நோக்கம், முன்பே குறிப்பிட்டது போல், நாம் பொருளுக்கோ, பதவிகளுக்கோ, பட்டங்களுக்கோ நம்மை எந்த நிலையிலும் எந்த அளவிலும் விற்றுக் கொண்டதில்லை என்பதையும், அத்தகைய ஆசை அங்கீகாரப்புகளுக்கே மனம் நெகிழ்ந்ததில்லை என்பதையும் நம் கழக அன்பர்களுக்கு உணர்த்துவதற்கே ஆகும் என்று உணர்க. மற்று, நம் அருமை பெருமைகளை நாம் உணர்த்துவதற்காகவன்று. அவ்வாறிருப்பின் இத்தகைய செய்திகளை நாம் அப்பொழுதைக் கப்பொழுதே பெருமையுடன் பறை சாற்றிக் கொண்டிருந்திருப்போம்.

இன்றைய உலக நிலைகளையும், அதில் அறிஞர்கள், புலவோர்கள் நிலைகளையும் ஒப்பவைத்து உணர்வோர் நம் மனநிலையையும், அமைந்தாற்றும் தமிழ்த் தொண்டையும், அடக்கமான போக்கையும் நன்கு விளங்கிக்கொள்வார். நமக்குற்ற கவலையெல்லாம் இவற்றையுங்கூட நாமே சொல்லி விளக்க வேண்டிய நிலை வந்ததே என்பதுதான். ஆனால், நன்னூலின் 53-ஆம் நூற்பா.

மன்னுடை மன்றத்து
ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல்
உணரார் இடையிலும்
தன்னை மறுதலை
பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும்
தகும்புல வோர்க்கே!

— என்று கூறுமாறு, ஒரோவிடத்து நம் தகுதிநிலைக்கன்றேனும், 'தன்னை மறுதலை பழித்த' இக் காலை இதனைக் கூறியாகல் வேண்டிய தேவை வந்ததென்க.

(தொடரும்)

12-5-85-இல்

ஈரோடு-பூரணா விடுதி மேல்மாடியில்
[வட்டாட்சி அலுவலகம் எதிரில்]
பன்னீர்ச்செல்வம் பூங்கா அருகில்
(காலை 9 மணியளவில்)

உ. த. மு. க. மாநிலச் செயற்குழுக் கூட்டம்

நடைபெறுகிறது!

(அழைப்பு எவருக்கும் அனுப்பப்பெறவில்லை. இதையே அழைப்பாகக் கொள்க!

அமைப்பாளர்களும், அன்பர்களும் தவறாமல் கலந்துகொள்க!

இரங்கற் புயலின் ஈடிலாச் செயல்கள்!!

— த. வேலுச்சாமி —

1. இந்தியா :

உலகிலேயே பெரிய குடியரசு(!) நாடாகிய நமது இந்திய நாட்டின் எட்டாவது பொதுத் தேர்தல் ஒருவாறு நடந்தேறியுள்ளது. அறிவை எட்டாத, பெரும்பான்மை மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி, ஆட்சி ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதை சிந்திக்கத் தெரிந்த எவரும் மறுத்தல், இயலாதது ஆகும்.

இன்று, இந்நிலையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இவ்வாட்சி முறையானது, நமது நாட்டில் முடியாட்சி எவ்வாறு குடியாட்சி என்ற ஆவின்தோல் போர்த்திய 'புலி'யாக உருவெடுத்ததோ அன்று முதல் நிலவி வரும் அருவருப்பான குடியரசாட்சி ஆகும். இந்த ஆட்சியை, அல்லது இந்த ஆட்சி முறையை மாற்றி அமைக்கப்பட்ட முடியாட்சி என்றே கூறும் அளவிற்கு மக்களிடம் அறியாமை மண்டிக் கிடக்கிறது.

ஆங்கிலேயர்களால், வணிக நோக்கில் ஏற்படுத்தப்பட்ட 'ஓர் இந்தியா' அமைப்பை உலகப் பெரு முதலாளிகளும், 'இந்தியத் தரகு முதலாளிகளும் தக்க வைத்துக் கொண்டதோடு, இந்து மத வெறி இயக்கங்களுக்குப் பொருளுதவி அளித்து, இவ் ஓரிந்திய அமைப்பைத் தந்நலத்திற்காக நிலை நிறுத்தப் பார்க்கின்றனர். அந்த இரு வகையான முதலாளியர்களும் இந்து மதத்தை ஏவி, அதை மக்களிடம் ஊன்றச் செய்து, மக்களை மடமைச் சேற்றினின்றும் மூடத் தனமான பல கடவுள் நம்பிக்கையினின்றும் வெளிக் கொணர வொண்ணா நிலையைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

அறிவியல் வகையாக 'இந்து' என்ற ஓரினம் இல்லவே இல்லை! அப்படியிருக்க ஆரியர் செய்த பல்லாயிரம் ஆண்டுச் சூழ்ச்சியினால் பல்வகைப்பட்ட நாட்டினங்களும் 'இந்து" என்ற ஓரினமாக வலுக்கட்டாயமாக ஏற்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர் இங்கு வந்ததும், அமைச்சர்களாகவும், பல முதன்மைப் பொறுப்பாளிகளாகவும் 'ஆலோசனை' வழங்குபவர்களாகவும் இருந்த ஆரியக் கொடியவர்களின் சூழ்ச்சியின் காரணியமாக பல்திறப்பட்ட நம் சிற்றரசர்களின் ஆட்சிகளைச் சிதைத்து, ஒருவாறு ஓரிந்தியா அமைப்பும், ஒரு மத அமைப்பும், ஓரின அமைப்பும் ஆக்கப்பட்டன.

'இந்து மதம்' என்ற பெயருக்குப் பகரமாக அதை மூட மதம் என்றே கொள்ளலாம். அஃது அந்த அளவிற்கு மூடத்தைத் தோற்றுவித்து, அதை இன்றும் நிலை நிறுத்தி வருகிறது. அந்த மூட மதத்திற்கு மேற்சொன்ன முதலாளியர் செல்வத்தை வாரி வழங்குவதோடு உறுப்பான்மையாகவும் உள்ளனர்.

அடிமைத்தனம் என்பதை அறியாமலும், ஏழ்மை என்பதை உணராமலும், அறியாமையை அறிவெனவும் மக்களை மயங்கச்செய்து, அவர்களை மக்கள் உருவிலான மாக்களாக்கிய, கீழ்த்தரக் கரவான தந்நலச் செயலானது இந்து மதத்தைச் சேர்ந்ததாகும். நம் இந்திய தேச மக்களை, இரக்க உணர்வானது, அளவுக்கு மிகுத்து, ஆட்கொண்டுள்ளது. அதற்குச் சான்றாகவே இந்தத் தேர்தல் முடிவுகள் உள்ளன.

தில்லியில் நடுவம் கொண்டிருந்த 'இந்திரா' எனும் புயலானது, உலகப்பெரு முதலாளிய, இந்தியத் தரகு முதலாளியப் பயிர்களுக்கு மழையையும், ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், இன்னும் வறுமை வயப்பட்ட அனைத்து மக்களுக்கும் சூறாவளி மிகுந்த, சிறு தூறலாகவுமே இருந்திருக்கிறது.

அந்தப் புயலானது, 'கொல்லப்பட்டது' என்னுமாறு வலுவடைந்து இந்தியா முழுவதும் சுழன்று சுழன்றடித்து, மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சீக்கிய உயிர்களையும், பற்பல சீக்கிய வழிபாட்டிடங்களையும், ஏராளமான சீக்கிய உடைமைகளையும் அழிவுபடுத்தியதோடு ஓயாமல், இன்று பேராய (காங்கிரசு)க் கட்சிக்குப் பெரும்பான்மை வலிமை என்னுமளவில், பெண்பால் (இந்திராகாந்தி), ஆண் பாலாக (இராசீவ் காந்தி) உருமாறி, அதே தில்லியில் ஆட்சியாகத் தேர்தல் எனும் கரையைக் கடந்து அமைந்துவிட்டது!

இந்திரா அவர்கள் இருந்தபோது, வாச்பாயி, சரண்சிங், தேசாய், சந்திரசேகர் போன்ற அரசியல் அறிஞர்கள் செல்லாக் காசாக்கப்பட்டனர். இந்திரா இறந்தபோதும் அவர்கள் இன்னும் ஒருபடி கீழ் நிலைக்கே மக்களால் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இதனின்று மக்கள் நேர்மையையும், அரசியல் பட்டறிவையும், மக்கள் நலம் கருதும் தலைவர்களையும், அறியாமையால் புறக்கணிக்கிறார்கள் என்பது தெளிவு. என்றாலும், ஆந்திர நாட்டிலும், மேற்கு வங்க நாட்டிலும், சம்மு காசுமீர் நாட்டிலும் 'இந்திரா' இறப்புப் புயலின் இடலாமை சிறிது மன நிறைவைத் தருவதாக இருக்கிறது.

இந்தியாவை ஆழம்போடும், அல்லது ஆளும் பேராயக் கட்சியானது, அன்னை(!)யின் ஆட்சியில் தென்பட்ட போலியான வெற்றுப் பரிப்புத் திட்டங்களையே மூன்னெடுத்துச் செல்லும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதை மக்கள் எவ்வாறு கண்டு உண்மை நிலை உணருவார்கள் என்பது இவர்களின் அறிவு மற்றும் மன நிலையைப் பொருத்தது.

2. தமிழ்நாடு :

தமிழகத்தில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும், மிகுதியாக இந்திராவின் மறைவுப் புயல் வீசியிருக்கிறது. அதற்குக் காரணியம், ம. கோ. இரா. அவர்களின் 'உடல் நலமின்மை' எனும் சூறாவளியும் உடன் சேர்ந்தது ஆகும். இவ்விரண்டும் சேர்ந்து மக்களின் சிந்தனை ஆற்றலைச் சிதைத்து, இரக்க ஆற்றலாக மாற்றிவிட்டது.

ஆற்றல் அழிவதில்லை. ஓராற்றல் மற்றோர் ஆற்றலாக மாற்றம் பெறுகிறது. இந்த அறிவியல் உண்மையை வைத்து மக்களைக் காணுமிடத்து; இரக்கமாக மாறிய சிந்தனை ஆற்றலானது, மறுபடியும் ஒரு முறை சிந்தனை ஆற்றலாக மாறும். அப்பொழுது சீரிய ஆட்சி அமையும்.

அரசியல் வணிகத்தில் அனைத்துத் தலைவர்களும் தரகர்களே என்பதை மக்கள் உணர்ந்தபாடில்லை.

மக்கள், இரக்கப்பசியை, ஒப்பேலை உணவால் போக்கி விட்டார்கள்! அவர்கள் உணர்வின் வயப்பட்டவர்கள் அப்படித்தான் செய்வார்கள். ஒருவர் தகாதவற்றை (அட்டூழியங்கள்) செய்திருந்தாலும், அவர் இறந்துவிட்டால்... அவரை மக்கள் அறிவுக் கண் கொண்டு காணாமல், உணர்வுக் கண் கொண்டு கண்டு, அவர்களுக்குச் சரியான, நாட்டிற்குக் கெடுதலான, தீர்ப்பை அளித்து விடுகிறார்கள். மக்களின் உணர்வைப் பயன்கொண்டு, ஆட்சியாளர்கள் விரைவில் தேர்தலையும் வைத்து, வெற்றியும் ஈட்டி விடுகிறார்கள்.

அண்டை நாட்டில் ஆயிரம் தமிழர் அன்றாடம் இறப்பினும் அதைக் கண்டு கொள்ளாத் தமிழக மக்களே! ஓர் இந்திரா காந்தி இறந்ததும், ஒரு ம. கோ. இரா. உடல்நலம் கெட்டதும் உங்களுக்கு வந்து விட்டதோ? இரக்கம்! ஏக்கம்! துயரம்!

சீ! ஏழாண்டு ஆண்டார்களாம் திராவிடப் பணந் தின்னிகள்; எந்த உணர்வை மக்களுக்கு ஊட்டி இருக்கிறார்கள்? அறிவுணர்வையா? மொழியுணர்வையா? இனவுணர்வையா? ஒன்றுமில்லை! கொள்கை மட்டும் தமிழ்! தமிழகம்!! தமிழர்!!! யாரை ஏமாற்றும் பூச்சாண்டி வேலை!

மக்களை உணர்வு வயப்பட்டவர்களாக்கியதன் விளைவு! இப்பொழுது உணர்ந்து கொண்டிருப்பார்களே! இனியேனும் உ.த.மு.க. போல உண்மையாக, இனத்திற்குப், மொழிக்குப், நாட்டிற்கும் திராவிட இயக்கங்கள் உழைக்கவேண்டும்.

படையில் உழன்று, மாடென உழைக்கும் தமிழனைத் தட்டி எழுப்புக. தூங்கித் தொடையைக் கண்டவர் கயறு திரிக்கக்கொடுத்த தமிழனைத் தொட்டு எழுப்புக.

ஒரு கட்சியின் தந்நலம் இன நலனை இழிவுபடுத்திவிடும். நினைவிற் கொள்க!

வாங்கி விட்டீர்களா?

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் புதிய வெளியீடுகள் விற்பனைக்கு அணியமாகவுள்ளன.

1. பாவேந்தர் பாரதிதாசன்	14—00
2. இனம் ஒன்று படவேண்டும் என்பது எதற்கு?	1—00
3. வாழ்வியல் முப்பது (மறு பதிப்பு)	1—50
4. சாதித் தீமைகளும், அதை ஒழிக்கும் திட்டமும்	0—50
5. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	2—25
6. தன்னுணர்வு	1—50
7. இலக்கியத் துறையில், தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	1—50

தொடர்பு கொள்ள:

மே/பா, தென்மொழி, சென்னை-5.

உ. த. மு. க. உறவு மடல் :

எழுதி என்ன செய்ய?

ஆயிரம் நெருப்புச் சுடர் எழுத்துகளை வாரி வாரி வழங்கினாலும், படிப்பவர் இயக்கப்படும் போதே அவற்றால் பயன் என்று கொள்வோம்.

உறவு வலுப்பட எழுதுகிறோம். உள்ளங்கள் கலந்திட எழுதுகிறோம். பள்ள நினைவுகள் நிரம்பிட எழுதுகிறோம். சோர்வு சரிந்திட எழுதுகிறோம்.

எழுதி என்ன செய்ய? என்ற ஏக்கம் எழுத்தாளரை மேலும் எழுதவே தூண்டுகிறது. ஏன் எனில் அவர்க்குள்ள எழுத்தின்மேலுள்ள நம்பிக்கைச் சுடர் மேலும் சுடர்கின்றது. அவர் எழுத்தின் கனலை ஏற்கும் நெஞ்சங்களை நோக்கி மேலும் சரஞ்சரமாய் எழுத்தம்புகளை வீசுகிறார். அதன் தொடர்ச்சியான தாக்குதல் (பாதிப்பு) நல் விளைவை ஏற்படுத்துதல் உறுதியே!

நம் பாவலரின் பெருஞ் சுடர்ப் பேச்சும், வடவைக்கனல் எழுத்தும், ஆழ்ந்துணர்ந்த நடையும் தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு வழியே விடாமல் தொடர்ந்து பெருவூழிக் கனலை ஊட்டி எழுப்பிக்கொண்டிருக்கின்றன.

அரிய மார்க்கியத் தோழர், பண்பன்-குணா-வின் ஆய்வுரைகள், அறிவாளர் கோட்டைகளை உருக்கி எல்லை கடந்து நடுத்தர அறிவாளரையும், உழைக்கும் மக்களையும் தொட்டு, ஒளி காட்டிக் கொண்டிருக்கின்றன.

அந்த ஒளியின் கதிர், புதிய தேடலுக்கு, அறிவு நாடலுக்கு வழி செய்வதை நாம் கண்டு வருகின்றோம்.

அவரிடம் பெற்ற புரிதலை இந்த மடலில் எழுதுகின்றேன். தொடர்ந்தேனும், விட்டுவிட்டேனும் ஒளியும், இருளும் போலச் செய்திகளை வழங்குகிறேன்!

15—1—1985 இல் குணா எழுதிய "தமிழீழ அரசியலின் அகப்புற அழுத்தங்கள்" காண்போம்!

கூண்டிலிருந்து கிளி பறக்கச் சிறகடிக்கிறது. அதனை, 'நீ எப்படிப் பறப்பாய்; எங்கே தொலைவாய்; எங்ஙனம் பிழைப்பாய்' என விளக்கங்கேட்டு 'விடுதலை கொடுக்க' விரும்புகிறார்கள். 'புரட்சியை' அந்தந்த நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும் என்பவர்கள் கூடத் 'தமிழீழ விடுதலையால் நிகரமை வருமா, இருப்பவன் இல்லாதவன் என்ற வேற்றுமை தீர்ந்துவிடுமா?' என்று வினாக்கணைத் தொடுக்கின்றார்கள்! இப்படிப்பட்ட குழந்தைத்தனம் அல்லது கிழட்டுக் குணம் கண்டு நம் நகைப்போமாக!

'தமிழீழ மக்கள்' தங்களின் இறையாண்மையைத் தீர்மானித்துக் கொள்ள முடியும்' என்பதை இவர்கள் ஏன் புரிந்துகொள்ள மறுக்கின்றார்களோ! நிற்க.

தமிழீழச் சிக்கல்பற்றிப் பகுப்பாய்வு செய்யும் பண்பன் அவர்களைத் தொடர்வோம்.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் விடுதலைப் புரட்சிக்குப் பின்னர் ஓர் ஒப்புரவு வாழ்வியலை அமைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் மலர்வது நல்ல அறிகுறி. அதற்காக, ஒப்புரவு-சமன்மை பற்றிய போர்த்தந்திர, செயல் தந்திரம் பற்றிக் கருத்துப்போரிட இது காலமன்று!

சோவியத்தும், சீனமும், சமன்மைக்கான போராட்டத்தில் பின்னடைவும், பிறழ்வும் கொள்வதைக் காட்டி, இன்று விடுதலையோடு, சமன்மை பேசும் தமிழீழ இயக்கங்கள் நாளை வழி தவறலாம் என்பதைப் புரிந்து கொள்கின்றோம்.

ஆடு நனைகிறதே என ஓநாய் கவலைகொள்வது போல, வல்லரசாளர்களும், பிறரும் 'தமிழீழப் படுகொலை' பற்றிய பரிவுரைகளை எழுப்புகின்றார்கள்!

அவர்களைப் பட்டியலிட்டு, அவர்தம் நிலைப்பாட்டை உரித்துக் காட்டுகின்றார் பண்பன்!

அவர்தம் 'ஆய்வு முறை'யினைக் குறை கூறுவார் உண்டு; எதிர்ப்போர் உண்டு. ஆயின், முயற்சி, ஊக்கம் கண்டு அவரும் வியப்பது உறுதி. நாம் அத்தகைய ஆராய்வுக்கு ஊக்கம், உதவி, சான்றுகளை வழங்கி வருதல் வேண்டும்.

— பறம்பை-அறிவன்.

அன்பர்கள் கவனிக்க ...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்கு மேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—அமைச்சர்.

நீள் வினையால் நீளும் குடி!

இதழ் எண் 54 இன் தொடர்ச்சி :

தொடர் : 2.

தமிழின முன்னேற்றமும், சிந்தனைத் திசை திருப்புதல்களும்!

காரடிப்பட்டி : க. கண்ணன்.

4. திரைப்படக் கயவர்களும், பரத்தையர்களும்:

அடுத்து, தமிழக மக்களின் வாழ்வியலையும், பொருளியலையும் சீரழித்துக் கொண்டிருப்பது திரைப்படத் துறையாகும். ஏனெனில், இந்தியாவிலேயே அதிகமான திரைப்பட அரங்குகள் இருப்பது தமிழ் நாடாகும்.

இளைஞர்கள் தங்களுடைய வறுமையைப் பற்றியும், தங்கள் இனத்தின் அடிமை நிலையைப்பற்றியும் சிந்திக்க விடாமல் பல்வேறு திசைகளில் திருப்புவதில் இன்றைய திரைப்படக் கயவர்களும், பரத்தையர்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். திரைப் படத் துறையைச் சேர்ந்தவர்கள், இன்று அரசியலையும் தங்கள் கட்டுப் பாட்டிற்குள் வைத்து, மக்களை ஆட்டு மந்தைக் கூட்டமாக மாற்றி வைத்திருப்பது தமிழ் நாட்டின் அரசியல் நிலையாகும். அரசியல் தலைவர்களே நடிகர்களையும், நடிகைகளையும் நோக்கி ஓடுவதிலிருந்து, தமிழினம் எந்த நிலைக்குத் தாழ்ந்து கொண்டு வருகிறது என்பதை உணரலாம். கொலை, கொள்ளை, கற்பழித்தல் போன்ற குமுகாயக் குற்றங்கள் திரைப் படத்தின் வழியே மிகைப்படுத்திக் காட்டப்பட்டு, அக் குற்றங்கள் அதிகமாக நடைபெறுவதற்கு வழிவகுத்து விடுகின்றன. வளரிளம் பருவத்தினர் முதிர்ச்சியடையுமுன்பே, பாலியல் குற்றங்களைச் செய்வதற்கும், தமிழர்களுடைய பண்பாட்டுச் சிதைவிற்கும் திரைப்படத் துறையினரே பெரிதும் காரணியமாயிருக்கின்றனர்.

இன்று நகர்ப் புறங்களில் அதிகமாகக் கட்டப்படுவது எல்லா வகை ஏந்துகளையுமுடைய உயர் அடுக்குத் தங்கும் விடுதிகளும், ஒரே இடத்தில் காலையிலிருந்து இரவு வரை திரைப்படம் பார்ப்பதற்கான பல அடுக்குத்திரை அரங்குகளுமாகும். பொருள் உருவாக்கமில்லாத இத் திட்டங்களின்மூலம் கோடிக்கணக்கான உருவாக்கள் வீணடிக்கப்பட்டுப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் வறுமைப் படுகுழியில் தள்ளப்பட்டுள்ளனர். இத் திரைப்படத்தின் வழியே மேல் நாட்டவரின் வளமான வாழ்க்கை நிலைகளும், பழக்க வழக்கங்களும் காட்டப்படுவதால், குமுகாயத்தின் மேல் தட்டு மக்கள் இதில் கவரப்பட்டு அடித்தளத்திலுள்ள உழைக்கும் மக்களை மேலும் மேலும் சுரண்டுகின்றனர். தமிழினத்திலுள்ள ஏழை எளியவர்களை மதிக்காமல் வெறுத்து ஒதுக்குகின்றனர். இவ் வுண்மைகளை யெல்லாம் இளைய தலைமுறையினரில் இன நல உணர்வுள்ள சிலரேனும் உணர்ந்து, ஒன்றுபட்டு போராடவில்லையாயின், எதிர்காலத்தில் முழுமையான பண்பாட்டுச் சீரழிவிற்கும், வேற்றின அடிமை நிலைக்கும் தமிழினம் தள்ளப்பட்டு விடும்.

5. தாளிகைத் துறையினரின் கயமைத்தனம்:

தமிழின முன்னேற்றத்தைத் திசை திருப்புவதில் இத் தாளிகைத் துறையினரும் முன்னணியில் இருக்கின்றனர். இத் தாளிகைத் துறையும் முதலாளியமாக்கப்பட்டு ஒரு சிலரின் கட்டுப்பாட்டிலிருந்து வருகிறது. உண்பதிலிருந்து உடை உடுத்துவது, உரையாடுவது வரை, தமிழர்களுடைய உண்மை நிலைக்குப் புறம்பாகத் தாங்கள் எழுதும் கதைகள், கட்டுரைகளில் சித்தரித்துக் காட்டுவது, எளிய மக்களின் பழக்க வழக்கங்களை இகழ்ந்தும், வேற்றினத்தின் பண்பாடுகளைப் புகழ்ந்தும் எழுதுவது போன்ற செயல்கள் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன. ஆரியப் பார்ப்பனர்கள் முன்பு எவ்வாறு தங்களுடைய புராண, இதிகாச பொய்க் கதைகளால் தமிழினத்தின் வீரவுணர்வை மழுங்கடித்தார்களோ அவ்வாறே இன்றும் தாங்கள் நடத்தும் இதழ்களில் திரைப்படக் கூத்தியரின் சதைத் திரள் மிக்க உருவங்களைக் காட்டியும், காம உணர்வைத் தூண்டும் கதைகளை வெளியிட்டும் இளைஞர்களைச் சீரழிக்கின்றனர். நம்முடைய இனப் பகைவர்கள்தாம் இவ்வாறு செய்கின்றனர் என்றால், தமிழினத்திற்காகவே உழைத்துக் கொண்டுள்ளதாகப் பறைசாற்றிக் கொள்ளும் தமிழர் தலைவர்கள் நடத்தும் இதழ்களும் இளைய தலைமுறையினரின் அறிவுணர்வை மழுங்கடிக்கும் கீழ்த்தரமான செயல்களிலேயே ஈடுபட்டுள்ளன. யாரை யார் ஏமாற்றுகின்றனர் என்று தெரியாமலேயே தமிழினம் மயங்கிக் கிடக்கின்றது.

பன்னாட்டு நிறுவனங்களும் தங்கள் அரசியல் வல்லாண்மைக்கும், பொருளியல் சுரண்டலுக்கும் தங்களது தாளிகைத் துறையைப் பயன்படுத்துகின்றன. இதில் முன்னணியில் இருப்பது அமெரிக்கா, உருசியா, இங்கிலாந்து, சப்பான் போன்ற தொழில் வளமிக்க நாடுகளாகும். தங்களுடைய பலபளப்பான இதழ்களின் மூலம் தங்களுடைய அரசியல் கருத்துகளையும், கவர்ச்சியான விளம்பரங்களையும் வெளிப்படுத்தி இங்குள்ளவர்களை மூளைச் சலவை செய்து விடுகின்றனர். இவ்வாறு சோவியத்து நாட்டால் உருவாக்கப்பட்ட கொள்கைக் குழப்பக் கருத்தாளர்களே இங்குள்ள பொதுவுடைமையரும், அமெரிக்கா, சப்பான் போன்ற நாடுகளால் உருவாக்கப்பட்ட பண்பாட்டுச் சீரழிவினருமாவர். தங்களுடைய பின்புலம் அறியாமல் வறட்டுத்தனமான ஒரு கொள்கைக்கு ஆட்பட்டு விடுவதில் தமிழினம் எப்பொழுதும் முந்திக்கொண்டு வந்துள்ளது.

முடிவுரை :

மொத்தத்தில் பார்க்கும்போது, தமிழினத்தின் ஐம்புல உணர்வுகளும் எங்கெங்கோ திசை திருப்பப்பட்டு, என்றென்றும் விழிக்க வியலா, மீளா உறக்கத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளது. பக்கத்தில் நடக்கும் தமிழீழப் படுகொலைகளால் எந்த வகைத் தாக்கமும் இல்லாமல் இங்கு 'தேர்தல்' விளையாட்டு விளையாடிக் கொண்டுள்ளனர்.

இக் கட்டுரையின் வாயிலாகத் 'தமிழினம்' 'தமிழின முன்னேற்றம்' என்ற சிந்தனையை நோக்கி நம்மைச் செல்லவிடாமல் தடுப்பது, சாதி, மத வேறுபாடுகளும், போலியான கொள்கைகளில்லாத அரசியல் கட்சிகளின் உட்பகைகளும், திரைப்படம் மற்றும் தாளிகைத் துறையினரின் கீழ்த்தரமான செயல்களுமேயாகும் என்பதை அறிந்தோம். இவ் வீழ்ச்சியிலிருந்து தமிழினத்தை மீட்டு முன்னேறச் செலுத்த வேண்டுமானால், இளைய தலைமுறையினர் எந்தவகை வெற்று ஆரவார உணர்வுக்கும் ஆட்படாமல் அசாம், பஞ்சாப் மக்களைப்போல் போராடுகின்ற நிலைக்கு வந்தாக வேண்டும். இல்லையேல் என்றும் நாம் அடிமையாகவேயிருந்து, அடிமையாகவே மடியவேண்டியதுதான். 0

உங்கள் மடல்கள்

படைப்பின் வழி ஊக்கம் அளிக்கின்றீர்கள் !

பேரன்பு கொண்ட பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, திருச்சி நடுவண் சிறைக் கைதி எம். சுந்தர் எழுதும் கடிதம் !

தென் பொதிகைத் தென்றலிலே தவழ்ந்து வந்து, தென்பாண்டி மதுரையிலே பொருந்தி நின்று, அழகமுது சொரிந்து வரும் ஆற்றல்மிகு செந்தமிழைத் தாங்கி வரும் தங்களின் "தமிழ் நிலம்" கிடைத்தது ! பெற்றேன்! படித்தேன்! புனிதமிகு நற்றமிழைப் பொலிவுடன் எடுத்தியம்பி, நெஞ்சப்பசி நிறைந்த எங்களுக்குத் தங்களின் நல்லுள்ளப் படைப்பு உணர்வையும், ஊக்கத்தையும் கொடுக்கின்றது! புரட்சிக் கருத்துகளை குவித்து வந்து போராட்ட உணர்வலையைத் தூண்டத்தான் செய்கிறது! இச் சீரழிவின் அரசை வெளிப்படுத்தி எழுதியுள்ள கட்டுரைகள் விறுவிறுப்பாகவும், அருவருப்புச் சாத்தான்களின் பகடிக் கூத்துகளையும் வெளிக் கொணர்ந்து விடியல் ஆற்றினிலே நீந்தி வந்துள்ள "தமிழ் நிலம்" தவித்து நிற்கும் சிறைப்பட்டோனாகிய என் கைகளில் மிளிர்கிறது. தங்களின் படைப்பின் வழி எனக்கு ஊக்கம் அளிக்கும் பண்புக்கு எனது நன்றியினைச் செலுத்திக் கொள்கின்றேன். இப்படிக்கு, அன்புள்ள,

-ம. சுந்தர், நடுவண் சிறை, திருச்சி-20.

தி. மு. க.-வின் அணுகு முறைகளும், அதன் தேர்தல் தோல்விகளும் !

உயர்திரு. ஐயாவுக்கு அன்பு வணக்கத்துடன் எழுதுவது. இதுவரை நான் யாருக்கும் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியது கிடையாது. தமிழ் நிலம் இதழில், தென்மொழி நா. இளமாறன் எழுதிய, 'தி. மு. க.-வின் அணுகு முறைகளும், அதன் தேர்தல் தோல்விகளும்' என்னை மிகவும் கவர்ந்த கட்டுரை. இதைக் கலைஞர் அவர்கள் படிக்கும் நிலை ஏற்படுமானால், கண்டிப்பாக அவர் ஒத்துக்கொள்வார். அவர் கருத்துக்கு இதைக் கண்டிப்பாக எட்டச்செய்வது நல்லது. தி. மு. க தோல்வியால் சோர்வடைந்திருந்த என்போன்ற உள்ளங்களுக்கு ஊக்கமளித்த இந்தக் கட்டுரையை அமைத்த, ஐயா, தென்மொழி நா. இளமாறன் அவர்களைப் பாராட்டுகிறேன். இப்படிக்கு, கட்டுரையின் உண்மைஉணர்ந்த, ஆ.குமார், சென்னை-39.

'தமிழ் நிலம்' வளர்ச்சிக்கு நன்கொடை !

அமைச்சர் அவர்களுக்கு, வணக்கம். தமிழ் நிலம் காலத் தாழ்த்தம் அறிந்தேன். முதாமையான காரணியம் பொருளியல் தட்டுப்பாடுதான். மனத்துக்கு மிகவும் துயரமாக உள்ளது. அழிவை விலைகொடுத்து வாங்கும் தமிழன், பாதுகாவலை வெறுப்போடு தவிர்க்கிறான். அறியாமையில் அழுந்துகிறான். இல்லாவிட்டால் 'தமிழ் நிலம்' வெளிவரத் தடை வருமா?

"தமிழ் நிலம்" வளர்ச்சிக்கு நன்கொடை திரட்ட நான் ஏற்பாடு செய்து கொண்டுள்ளேன். எப்படியும் என்னால் இயன்ற கடமைகளைத் தவறாமல் செய்து முடிப்பேன்.

- வள்ளிகேள்வன், ஈரோடு-4

சென்னையில், தமிழீழ விடுதலை ஆதரவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது !

சென்னை, சேப்பாக்கம் பகுதியில் தமிழீழ விடுதலையை ஆதரித்து மாபெரும் பொதுக்கூட்டம், 15—4—1985 திங்கள்கிழமை நடைபெற்றது. இக் கூட்ட ஏற்பாட்டைப் பகுதிவாழ் இளைஞர்கள், 'தமிழீழ நட்புறவு நண்பர்கள்குழு' என்ற அமைப்பின் பெயரில் ஏற்பாடு செய்திருந்தார்கள். கூட்டத்திற்கு திரு. வியனரசு தலைமையேற்று, திரு ஆகுனறன் வரவேற்புரையாற்ற, திரு வீராசாமி, திரு. சங்கர் ஆகியோருரைக்குப்பின், தமிழீழ விடுதலைப் போராளி திரு. குமரன் (E.R.O.S) உரைக்குப் பின், பேராசிரியர் பெரியார்தாசன் தமிழீழ விடுதலையை ஆதரித்துப் பேசினார். அவரையடுத்து, தமிழீழ விடுதலைப் போராளி, திரு, செயபால், (E.R.O.S.) பேசினார். இறுதியாக, சிறப்புப் பேருரையாளர், பாவலரேறு பெருஞ்சித்திரனார் (முதல்வர் உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்). தமிழீழ நாட்டில் சிங்கள அரசு, எவ்வெவ்வகைகளில் தமிழர்களைக் கொடுமைப்படுத்தினார்கள் —கல்வித்துறையில், பொருளியல் துறையில், அரசுப் பணித்துறையில், படைத்துறையில், காவல் துறையில், தமிழர்கள் எவ்வெவ்வகைகளில் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதை எல்லாம் விரிவாகவும், வரலாற்று அடிப்படையிலும், ஆணித்தரமான சான்றுகளை எடுத்துக்காட்டித் தமிழர்களுக்குத் தனி நாடு ஒன்றே முடிவு என்றும், ஈழ விடுதலையைத் தவிர, வேறெந்த முடிவையும் தமிழகம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும் பேசினார். சிறப்புரைக்குப் பின், இக் கூட்டத்தின் வாயிலாக இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானம் : 1.

தமிழக அரசுக்கு எச்சரிக்கை !

கிழக்கு வங்க விடுதலையின்போது, அஃதாவது வங்காள தேச விடுதலையின் பொழுது, மேற்கு வங்க அரசினால் அனுப்பப் பெற்ற, 'முக்திவாகினி' படையைப்போன்று, தமிழக அரசு தனி முயற்சியில் இலங்கைக்கு ஒரு படை அனுப்பவேண்டும். அங்ஙனம் செய்யத் துணிவு இல்லாத சூழலில் இவ்வரசு ஆட்சிப் பொறுப்பை கலைத்துக்கொள்வது நல்லது.

தீர்மானம் : 2.

இந்திய நடுவண் அரசுக்கு எச்சரிக்கை !

ஈரான், ஈராக் போருக்கு அனுதாபம் தெரிவித்தும், பாலத்தீன விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தும் கொண்டிருக்கும் இந்திய அரசு, இலங்கையில் தமிழீழ விடுதலைக்கு ஆதரவு தரவேண்டும் என்றும், தமிழீழ நாட்டைத் தனி நாடாக, இந்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும், ஈழ விடுதலைப் போராளிகளுக்குப் பலவகையிலும் கருவி உதவி செய்ய வேண்டும் என்றும். அப்படிச்செய்ய நடுவண் அரசு தவறுமேயானால், தமிழக இளைஞர்கள் விரைவிலேயே தனித் தமிழ் நாடு கோரிக்கையை முன்வைத்துக் கிளர்ச்சியில் இறங்கவேண்டி வரும் எனவும் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்ட நேரத்திலேயே மக்களிடமிருந்து தண்டல் செய்த உருபா. 500, ஈழப் போராளிகளுக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் வழங்கப்பெற்றது. திரு. மூர்த்தி நன்றியுரையாற்ற கூட்டம் முடிந்தது.

இந்த நிகழ்ச்சி இப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி மக்களைக் கவர்ந்ததும், பெருமளவில் மக்கள் திரண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

—செய்தி : வியன்.

தமிழீழ விடுதலைக்கு ஆக்கம் தமிழக விடுதலையே!

ம. கோ. இரா. அரசு, பார்ப்பன அடிமை அரசே!

— வள்ளிகேள்வன் —

இதுவரை எந்த ஆட்சியிலும் இல்லாதவகையில் அ.தி.மு.க.-வின் ஆட்சிக்காலத்தில், பார்ப்பனியம் ஆழமாகக் காலூன்றிவிட்டது. அரசியலும் மிக மிகத் தாழ்ந்துவிட்டது. கண்ணியமுள்ள அறிஞர்கள், தன்மானமிக்க இளைஞர்கள் எவரும் அரசியலில் நுழையவே தயங்கும் வகையில் அரசியலின் போக்கையே அ. தி. மு. க. மாற்றிவிட்டது.

அரசியலை ஒட்டுமொத்தமாகத் திரைப்படக் கவர்ச்சியின் கீழ் கொண்டுவந்து விட்டார் ம.கோ.இரா. இது மக்களிடையே தமது சாய்காலை என்றென்றும் நிலைநிறுத்திக்கொள்ள அவர் கையாண்டுவரும் வலக்காரமாகும். எதிர்காலத்தில் அரைகுறை அம்மணமாகத் திரைப்படங்களில் ஆடும் ஆட்டக்காரர்களெல்லாம் அரசியல் மேடையில் பேசிவந்தால் வியப்படைவதற்கில்லை.

புதுச்சேரி தேர்தலின்போது கூட செய்தித்தாள் ஒன்றில் 'திரைப்பட நட்சத்திரங்கள் குவிந்திருக்கும் புதுவை' என்று செய்தித் தலைப்பு வெளியாகியுள்ளது.

ஆற்றல் மிகுந்த அறிஞர்கள் அரசியலில் நுழைந்தால், அவர்களை அடையாளம கண்டுகொளளக்கூட மக்கள் அணியமாக இல்லை. அந்த அளவுக்கு மக்களின் அறிவை மழுங்கடித்துவிட்டார்கள்.

இனி மக்களுக்காகவே பணியாற்றப் போவதாகக் கூறிக்கொள்ளும் ம. கோ. இரா.-வின் அமைச்சரவையை நினைத்தால் மிக மிக அருவருப்பாக இருக்கிறது. தங்களுடைய தன்மதிப்பை விற்றுவிட்டால்தான் பதவியை நிலையாக வைத்துக்கொள்ள முடியும் என்ற நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விட்டார்கள். அண்மையில் நடந்த அமைச்சர்களின் பதவியேற்பு நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, அவர்கள் அமைச்சர்களா அல்லது ம. கோ. இரா. - வின் அடிமைகளா என்று மிகவும் இரங்கவேண்டியதாயுள்ளது.

"முத்துசாமி, திருநாவுக்கரசு, சௌந்திரராசன் கோவேந்தன், கோமதி-சீனிவாசன், விசயலட்சுமி-பழனிச்சாமி, யூசுப், கே.ஏ.கே., எசு. எசு. ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் அடுத்தடுத்துப் பதவி ஏற்புச் செய்துகொண்டார்கள். ஆளுநரிடம் வணக்கம் தெரிவித்து விட்டு, முதல்வரிடம் சென்று காலில் விழுந்து வணங்கி வாழ்த்துப்பெற்றுச் சென்றார்கள்."

(தினமலர், 16-2-85)

"பதவிப் பொறுப்பை ஏற்க வரும்படி பாண்டியனை, ப. உ. சண்முகம் அழைத்தார். உடனே பி. எச். பாண்டியன் ம. கோ. இரா. அருகில் சென்று காலில் விழுந்து வணங்கினார்." (தினமலர், 28-2-85)

"பதவி ஏற்ற அமைச்சர்கள் ஆளுநருடன் கை குலுக்கினார்கள். பிறகு ம. கோ. இரா.-விடம் சென்று வாழ்த்துப்பெற்றனர். சிலர் ம.கோ.இரா.-வின் காலைத் தொட்டு வணங்கினார்கள்." (தினத்தந்தி; 4 3-85)

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தி நோக்கும்போது, ஓர் உண்மை புலப்படுகிறது. ம. கோ, இரா.-வைப் பொறுத்தவரையில், அவர் காலில் விழுந்து வணங்கித் தன்மதிப்பைத் துறந்தவர்கள் தாம் தொடர்ச்சியாகப் பதவியில் நிலைக்கமுடியும். அமைச்சர்களும் அந்த முடிவுக்குத்தான் வந்துவிட்டார்கள்.

அமைச்சர்கள் இப்படி ம. கோ. இரா.-வின் காலில் விழுந்து பணியும் அடிமைகளாக இருக்கிறார்கள் என்றால், ம, கோ. இரா. முற்றிலும் பார்ப்பன அடிமையாகவே மாறிவிட்டார் எனில் அது மிகையாகாது. அவர் பதவி ஏற்றபின், மூத்த தமிழ் அறிஞர்களில் யாரையாவது சந்தித்து வாழ்த்துப் பெற்றிருந்தால் அது நல்ல பண்பாக அமைந்திருக்கும். ஆனால் அவரோ, நேராகக் காஞ்சிபுரம் சென்று, மூன்று சங்கராச்சாரிகளையும் சந்தித்து வணங்கியுள்ளார். (ஒருவேளை காலில் விழுந்தும் வணங்கியிருக்கலாம்) அவ்வளவோடு நிற்கவில்லை. பெரிய சங்கராச்சாரியாரை, நீண்டகாலம் இருந்து, மக்களை வாழ்விக்கவேண்டும் என்று வேறு கேட்டுக் கொண்டுள்ளார். (தினத்தந்தி, 11-3-84) பார்ப்பனக் கூட்டத்தில் தலைவரை, பார்ப்பனியத்தைப் பரப்புவதற்கே காலமெல்லாம் பாடுபட்டு வரும், சாதி வெறி பிடித்த சங்கராச்சாரியை நீண்ட காலம் இருந்து மக்களை வாழ்விக்கவேண்டும் என்று தமிழக முதல்வர் வேண்டிக் கொள்கிறார் எனின் அவரது பார்ப்பனப் பத்திமைக்கு வேறு சான்றும் வேண்டுமோ?

அரசு பலகோடி உருபாக்களைச் செலவிட்டுக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. ஆனால் சங்கராச்சாரியோ பத்துக் குழந்தை பெற்ற பெண்ணுக்கு வீரத்தாய் பட்டமும், பரிசும் அளிக்கிறார், இப்பரிசளிப்பு விழா நிகழ்ச்சிக்குக் கண்டனம் தெரிவிக்கக் கடமைப்பட்ட முதல்வர், மக்களை வாழ்விக்கும்படி வேண்டிக்கொள்வதை என்னவென்று சொல்வது?

இனி, துணை அவை நாயகரோ முதல்வர் வழியை பிறழாமல் பின்பற்றியுள்ளார். எப்படி? காஞ்சிபுரம் சென்று மூன்று சங்கராச்சாரிகளையும் வணங்கிவிட்டு, நேராக அறிஞர் அண்ணா இல்லத்திற்குச் சென்று அண்ணா சிலைக்கு மாலையணிவித்தார். துணை அவை நாயகரின் இச்செய்கை, ஒருத்தி பரத்தமைத்தொழில் செய்துகொண்டே கற்பரசி என்று காட்டிக்கொள்வது போலல்லவா இருக்கிறது?

இவர்கள் இரண்டு பேரையும் தூக்கிச் சாப்பிட்டுவிட்டார் உள்ளாட்சித் துறை அமைச்சர் சௌந்திரராசன். திருவரங்கத்தில் செப்புக்கவசம் ஏற்பு விழாவில் (இடம்: அரங்கன் அரங்கம்) அமைச்சர் பேசும்பொழுது, சீயர் துறவியையும், ஆண்டவன் துறவியையும் பாராட்டு முகத்தான் கீழ்க்காணுமாறு திருவாய் மலர்ந்திருக்கிறார்.

"கடவுள் எழுதிய எழுத்தை அழிக்கும் ஆற்றல் கூட ஆச்சாரியர்களுக்கு உண்டு. நமக்கு இரு ஆச்சாரியர்கள் கிடைத்துள்ளனர். ஆச்சாரியர்கள் இங்கு இருந்து நமக்கு அருள் புரிகின்றார்கள்."

(தினமலர், 14-3-84)

எப்படி இருக்கிறது? அண்ணா திராவிடத்தை முன்னேற்றும் கழகத்தைச் சேர்ந்த அமைச்சர் பேசுவது! இவர்கள் போகும் போக்கைப் பார்த்தால், நாளைக்கு ஈழ விடுதலைப்புலிகள் சங்கராச்சாரியின் அருளால்தான் தமிழ் ஈழம் அடைந்தார்கள் என்றுகூடப் பேசிவிடுவார்கள்.

இறுதியாக, தமிழக முதல்வர் ம. கோ. இரா.-வின் தமிழ்ப் புத்தாண்டுச் செய்தியைக் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

"இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் தன்மதிப்புடனும் (சுயமரியாதை), மாந்த உரிமையுடனும் சரிநிகர் சமமாக வாழும் உறுதிப்பாடும் (உத்திரவாதம்) கிடைக்கும் வகை செய்யப்படவேண்டும்."

(தினசரி, 13-4-85)

அமைச்சர்களைத் தன்மதிப்பை இழந்து, காலில் விழுந்து வணங்கும்படி செய்த முதல்வர், இலங்கைத் தமிழர்கள் தன்மதிப்புடன் வாழ்வதைப் பற்றி எந்தத் தகுதியில் குறிப்பிட முன்வந்தார்?

இப்படிப்பட்ட போலிமைத் தலைவர்களை நம்பி நம் தமிழகம் எத்தனைக்காலம் சீரழிவது?

0.

தமிழ் இளைஞர்கள் எங்கே போகிறார்கள்!

ரசிகர்கள் ஊர்வலம்

"தாவணி கனவுகள்" படம் இன்று முதல் திரையிடப்படுவதை யொட்டி, சென்னையில் பாக்கியராஜ் ரசிகர்கள் ஊர்வலம் நடத்தினார்கள்.

மேலே உள்ள படத்தைப் பாருங்கள்! திரைப்பட இயக்குநர் கே. பாக்கியராசு, 'முந்தானை முடிச்சு' என்று ஓர் அருவருப்பான திரைப்படம் எடுத்தார். அதற்குத் தமிழ்த் திரைப்படச் சுவைஞர்களிடத்தில் பெரிய வரவேற்பிருந்தது. பச்சையும் கொச்சையுமான உரையாடல்கள்! அப்படத்திற்கிருந்த பண வருவாயையும், பட வரவேற்பையும் பார்த்து, அதே பாணியில் 'தாவணிக் கனவுகள்' என்று ஒரு படம் எடுத்தார். அந்தப் படம் திரையிடப்படும் நாளில் சென்னையில் நடந்த அவருடைய சுவைஞர்கள் கூட்டம் இது! தமிழைக் காக்கவோ, தமிழின முன்னேற்றத்திற்காகவோ போராடவேண்டிய இளமை உள்ளங்கள் எப்படி அல்லாடுகின்றன என்பதை இப்படத்தில் பாருங்கள்! ஐயோ! தமிழகமே! உன்னை நோவதா? உன் மக்களை நோவதா? உன் எதிர்காலம் எப்படியிருக்கும் என்று தெரியவில்லையே! 0

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய தெலுங்கு மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய தமிழக முதல்வர் என்ன சொல்லியிருக்கிறார் பார்த்தீர்களா?"

"சொல் தம்பி!"

"உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது போல, உலகத் தெலுங்கு மாநாட்டை நடத்தத் தமிழக அரசு அணியமாக உள்ளது என்று பேசியதாக வானொலி ஒரு செய்தியை ஒலி பரப்பியதே!"

"ஆமாம்."

"உலகத் தெலுங்கு மாநாட்டைத் தமிழகத்தில் நடத்தினால், தமிழக அரசுக்கு ஒன்று ஊதியம் கிடைக்கவேண்டும் அல்லது இழப்பு ஏற்படவேண்டும் அல்லவா?"

"ஆமாம்."

"ஊதியம் கிடைப்பதாயின் தமிழக அரசு தெலுங்கர்களின் பணத்திற்கு ஆசைப்படுகிறது என்றும், இழப்பு (செலவு) ஏற்படுவதாயின் தமிழக மக்களின் வரிப் பணத்தைத் தெலுங்கர்களுக்குச் செலவிடத் தமிழக அரசு ஆயத்தமாக உள்ளது என்றும் தானே பொருள்படும்?"

"எனக்குத் தெரியாது தம்பி!!" —தமிழவேள்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி. பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவு எண்: TN/ (C) 657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திரு/திருவாட்டி
திருவல்லிக்கேணி
சென்னை—5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.